சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP.269/2013**

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் நாள் திங்கட்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயகுமார் | தொழில் | டிரைவர் |
| தந்தை பெயர் | ஜெயராமன் | ஜாதி | |
| கிராமம் | அரியபாடி | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 45 |

**15.06.2026 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து பதிவேடு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து வாகனத்தின் பதிவு சான்று சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து வாகனத்தின் காப்பீடு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுவில் கோரியுள்ளவாறு உத்தரவாகும் படி கேட்டுக்கொள்கிறேன். (மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)